# SG Digital

## meLISTEN தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

meLISTEN' இலவச, தனிப்பட்ட மற்றும் இருவழி மின்னிலக்க ஒலி அனுபவத்தை உங்களுக்கு வழங்குகிறது. நீங்கள் எங்கு இருந்தாலும். வீட்டிலிருக்கும் உணர்வைக் கொடுக்கும் பழக்கமான ஒலிகளுடனும் உங்கள் அபிமான உள்ளூர் வானொலிப் படைப்பாளர்களுடனும் இணைந்திருங்கள்!

## படிநிலை 1 — meLISTEN செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**Apple App Store**, **Google Play Store** அல்லது **HUAWEI AppGallery**-க்குச் சென்று, **meLISTEN** செயலியைப் பதிவிறக்குங்கள் மற்றும் நிறுவுங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க **'Get'** என்பதைத் தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க **'Install'** என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 — ஒரு meCONNECT கணக்கை இலவசமாக உருவாக்கி, உள்நுழையுங்கள்

மீடியாகார்ப்பின் அனைத்து மின்னிலக்கச் சேவைகளிலும், **ஒரே meCONNECT கணக்கை** நீங்கள் பயன்படுத்தலாம்.

மாறாக, உங்கள் Apple, Facebook அல்லது Google கணக்கைப் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.




3. உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி, ஒரு புதிய meCONNECT கணக்கை உருவாக்குங்கள்.




4. உங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதி விவரங்களைச் சேர்ப்பதன் வழி கணக்கை உங்களுக்கு மட்டுமே உரியதாக்குங்கள்.




5. உங்களுக்குப் பிடித்த வானொலி நிலையங்கள் மற்றும் வலையொலிகள் பற்றி எங்களோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள். உங்களுக்கான நிகழ்ச்சிகளை நாங்கள் பரிந்துரைப்போம்!

## படிநிலை 3 — வானொலி நிலையங்கள் மற்றும் வலையொலிகளைக் கேட்கத் தொடங்குங்கள்




6. உங்களுக்குப் பிடித்த வானொலி நிலையங்களோடு இணைந்திருப்பதோடு, இலேசாகத் தட்டுவதன் வழி அவற்றை எளிதாகக் கேட்டு மகிழலாம்!




7. உங்கள் அபிமான படைப்பாளர்களின் பல்வேறு வலையொலிகளைக் கேட்பதோடு, பிரத்தியேக நிகழ்ச்சிகளையும் இந்தப் பக்கத்தில் கண்டறியுங்கள்!




8. பாடல் வாக்களிப்பு, வாக்கெடுப்புகள், சுவைத் தகவல்கள் என மேலும் பல வழிகளில் அவர்களுடன் இருவழித் தொடர்பில் இணைந்திருங்கள்!

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(மீடியாகார்ப் வழங்கும் தகவல்)*

- உங்கள் உள்நுழைவு விவரங்களை மற்றவர்களுக்கு **வெளியிட வேண்டாம்**, ஏனெனில் அது உங்கள் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கு அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு வழிவகுக்கும்.
- அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தடுக்க, **வலுவான கடவுச்சொல்லை** உங்கள் சாதனத்தில் பயன்படுத்துங்கள்.
- உங்கள் இணையக் கணக்கு ஊடுருவப்படும் அபாயத்தைக் குறைக்க, உங்கள் கடவுச்சொல்லை **அடிக்கடி மாற்றுங்கள்**.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY